விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 295 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை (10.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### நீதியின் சுயாதீனத்தை பாதுகாக்குக

## உயர் நீதிமன்றத்தின் முன் சட்டத்தரணிகள் போராட்டம்




(கொழும்பு)
நீதிபதிகளினதும் நீதித்துறையின தும் கௌரவத்தையும் சுயாதீனத் தன்மையையும் பாதுகாக்குமாறு வலி யுறுத்தி நாடளாவிய ரீதியி லுள்ள சட்டத்தரணிகள் ▷15

### எதிர்வரும் 20ஆம் திகதி

## வடக்கு - கிழக்கில் பூரண ஹர்த்தால்

### தமிழ்க் கட்சிகள் அழைப்பு



(யாழ்ப்பாணம்)
வடக்கு - கிழக்கில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.
இதற்கு அனைத்து தரப் பினரும் தமது ஆதரவைத் ▷16

### உலக நாடுகளிடையே பதற்றம்

## கடும் தாக்குதலுக்கு தயாராகும் இஸ்ரேல்

- இஸ்ரேல் - ஹமாஸ் மோதலால் பற்றி எரியும் காசா
- காசா முனையில் ஒரு இலட்சம் வீரர்களை குவித்த இஸ்ரேல்.
- உலக சந்தையில் சடுதியாக அதிகரித்த கச்சா எண்ணெய் விலை.
- பதில் நடவடிக்கையால் மத்திய கிழக்கை மாற்றுவோம் என இஸ்ரேல் பிரதமர் தெரிவிப்பு.



(02ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)
வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங் களில் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாதகமான நிலைமை காணப் படுகின்றது.
கிழக்கு, ஊவா, மத்திய, வடக்கு மற்றும் ▷15

### க.பொ.த (சா/த) பரீட்சை

## மே மாதத்துக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)
இந்த வருடம் டிசம்பரில் நடத்தப்பட விருந்த கல்வி பொதுத் தராதர சாதாரண ▷15

## இஸ்ரேலில் உக்கிரப் போர் இலங்கைப் பெண் பலி



(காசா)
இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக் கும் இடையிலான உக்கிர மோதலில் காய மடைந்த இலங்கைப் பெண் உயிரிழந்துள் ளார்.
காணாமல்போன நிலையில் ▷15

### வாகனங்கள் தவிர்ந்த

## அனைத்து பொருட்களுக்கான இறக்குமதித் தடை முற்றாக நீக்கம்

(கொழும்பு)
வாகனம் தவிர்ந்த ஏனைய அனைத்து பொருட்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த இறக்கு மதி கட்டுப்பாடுகள் இன்று முதல் நீக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பான விசேட வர்த்தமானி அறி வித்தல் வெளியிடப் ▷15

## மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் மரணம்

### ஜே.சி.பி இயந்திரத்தை கழுவிய வேளை விபரீதம்

(யாழ்ப்பாணம்)
ஜே.சி.பி இயந்திரத்தை கழுவிக் கொண்டு இருந்த வேளை மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்றுமுன்தினம் ஈவினை, கிழக்கு புன்னாலைக்கட்டு வன் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற் ▷15

### யாழ்ப்பாணத்தில்

## பாழடைந்த கட்டடத்தில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு அரு கிலுள்ள பாழடைந்த ▷15

### தொழில்நுட்ப தடங்கல்


## பயணிகள் கப்பல் சேவை 12ஆம் திகதியே ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
தொழில்நுட்ப தடங்கல் காரணமாக காங்கேசன்துறைக் கும் நாகபட்டினத்துக்குமான முதலாவது பயணிகள் கப்பல் சேவை 12ஆம் திகதியே ஆரம் பமாகும் என அறி விக்கப்பட்டுள்ளது. ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்



தோற்றம் 29 - 07 - 1956

மறைவு 11 - 09 - 2023

அமரர் முருகுப்பிள்ளை

நவரத்தினலிங்கம் (சிறாப்பர்)

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)

கடந்த 11.09.2023 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் **முருகுப்பிள்ளை நவரத்தினலிங்கம்** அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 11.10.2023 புதன்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் குரும்பைகட்டி வைரவர் ஆலய வளாகத்தில் நடைபெற்று அஸ்தி செல்வச்சந்நிதி ஆற்றங்கரையில் கரைக்கப்படும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தயவுகூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குரும்பைகட்டி,
புலோலி வடமேற்கு, புலோலி. (C-7408)

தகவல் : குடும்பத்தினர்
077 076 1812

## கடும்...

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் படைகளுக்கும் இடையே உக்கிரமான போர் இடம்பெற்று வருகின்றது.

காசா மீது இஸ்ரேல் இராணுவம் பாரிய முற்றுகைத் தாக்குதலை நடத்தவதாக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிகளில் மின்சாரம், உணவு, தண்ணீர் மற்றும் எரிபொருள் விநியோகங்கள் தடைப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். காசாவை சுற்றியுள்ள நகரங்களின் கட்டுப்பாட்டை கைப்பற்றி உள்ளாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய ஊடகங்களை மேற்கோள் காட்டி வெளிநாட்டு ஊடகம் இத்தகவலை வெளியிட்டுள்ளது. இஸ்ரேலுக்கும் ஹமாஸ் படைக்கும் இடையே நடந்து வரும் உக்கிரமான மோதலில் இரு தரப்பிலும் 1100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காசாவை சுற்றி வசிக்கும் மக்களை 24 மணி நேரத்தில் வெளியேற்றும் பணியில் இஸ்ரேல் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்த மோதலில் 700க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் உயிரிழந்துள்ளதாகவும், பாலஸ்தீனத்தில் 413 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரு தரப்புக்கும் இடையிலான மோதல்கள் மேலும் மோசமடைந்து வருவதாக வெளிநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதல்களில் இஸ்ரேலில் தங்கியிருந்த 10 நேபாள மாணவர்கள் உயிரிழந்துள்ளதாக நேபாள அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல் உள்நாட்டு போரில் சிக்கித்தவித்த இந்தியர்கள் 27 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு எகிப்தை சென்றடைந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மோதல் பகுதிகளில் உள்ள இலங்கையர்களுடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து வருவதாக இலங்கை வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும்,

மத்திய கிழக்கை மாற்றப்போகின்றோம் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகு தெரிவித்துள்ளார்.

ஹமாசின் தாக்குதலிற்கான இஸ்ரேலின் பதில்நடவடிக்கை மத்திய கிழக்கை மாற்றும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் மிகமோசமான பயங்கரமான அனுபவங்களை எதிர்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஏற்பட்டுள்ள போர் நிலைமை காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை சடுதியாக அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

நேற்று காலை நிலவரப்படி, கச்சா எண்ணெய்யின் விலையானது 5 சதவீதம் அதிகரித்துள்ளது.

இது சர்வதேச பொருளாதார விவகாரங்களில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.

போர் நீடித்து சிக்கலான சூழ்நிலை தொடருமானால் கச்சா எண்ணெய் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது.

தற்போது சர்வதேச அளவில் பல நாடுகளில் பொருளாதார மந்த நிலை காணப்படுகிறது. கச்சா எண்ணெய் விலை உயர்வால் இந்த பாதிப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

(ம-7)

*(இது தொடர்பான மேலதிக செய்தி உள்ளே)*

# மரண அறிவித்தல்



தோற்றம்
12.06.1951

மறைவு
09.10.2023

திருமதி

## புளொரன்சியா றெஜி சொலமன்

(ஜொய்சி) (ஓய்வு பெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புளொரன்சியா றெஜி சொலமன் அவர்கள் 09.10.2023 திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியர் - லில்லி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராஜதுரை சொலமன் - அருள்கிறேஸ் தம்பதியினரின் அன்பு மருமகளும் திரு. றெஜி சொலமன் (ல்ாவண்யா பல் மூக்கு கண்ணாடி அகம்) அவர்களின் அன்பு மனைவியும் தக்ஷி, Dr.புருஷோத்தமன்(Jaffna Dental Clinic), லாவண்யா, அருள்தர்மினி (சுவீடன்), மைத்திரி(சிங்கப்பூர்) மற்றும் பிரபாகரன் (பொறியியலாளர்- கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.S.சிவறூபன், Dr.P.சந்திரப்பிரியா, திரு.P.நரேன்(Asst. manager - Srilanka Telecom) மற்றும் திரு.ஜெனற்றஸ்(Solution Architect - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமியும் காவியன், யோகிதன், காசினி, ஆரோன் செயோன், அத்விகா சோழன், காருண்யன், கவிநயா, தேஷோத், கத்லீன் மற்றும் விகான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் விவியன், மேரி பெனிக்னா, கிளரன்சியா, புளோரிடா, யோசப் ஸ்பென்சர் மற்றும் றுவினா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.10.2023) புதன்கிழமை மாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து யாழ் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.385,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (17406)

தகவல்:
Dr.S.R.L புருஷோத்தமன்
மகன் (077 852 2401)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புத்துணி கட்டி கண்டனப் போராட்டம்





**(நெளுக்குளம்)**
**முல்லைத்தீவு இளைஞர்களின் ஏற்பாட்டில் முல்லை மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதி கோரி கண்டனப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**



நேற்று மு.ப 10.15 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கறுப்புத்துணியால் வாயினை கட்டியவாறு அமைதியாக கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்ட பின்னர் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் நீதி அமைச்சின் செயலாளருக்கு கையளிக்க மகஜர் கையளிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் திட்டமிட்டு நடத்தப்படும் அத்துமீறல் குடியேற்றம் மற்றும் நீதிபதிக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் அத்தோடு இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளமைக்காக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நீதிபதிக்காக நீதி கேட்கும் இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு என்ன நீதியோ?, நீதியின் கழுத்தில் தூக்குக்கயிறு தீர்ந்து போனதா நியாயத்தின் உணர்வு, நீயும் பெண்தானே நீதி கிடைக்காத பெண்களுள் நீயும் ஒருத்தியோ? நீதி தேவதையே, தொடர்ந்து நடந்தேறும் நீதிபுரள்வுகளுக்கு என்ன தீர்ப்பு நீதி அமைச்சே? போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (நி-5-6-299)

# தொடர்ந்தும் நாட்டை தாரைவார்க்கும் ஆட்சியாளர்கள்

## தம்மரத்னதேரர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)
ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் நாட்டை தாரைவார்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் இதனை தடுக்க மக்களுடன் இணைந்து பணியாற்ற போவதாகவும் மிஹிந்தலை மகா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனு தம்மரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டால் உள்ளூர் மீனவர்கள் எவ்வாறு ஜீவனோபாயத்தைக் கொண்டு நடத்துவார்கள்?

இன்று முழு நாடுமே தாரைவார்க்கப்பட்டு விட்டதை போன்ற நிலையே உள்ளது. நிர்வாகிகள் வெளிநாடுகளுக்கு சென்று உடன்படிக்கைகளை செய்து வருகிறார்கள்.

வந்து ஒரு கிழமைக்கு பின்னரோ அல்லது ஒரு மாதத்திற்கு பின்னரோ நாட்டு வளங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அடகு வைத்துள்ளதாகவும் அறிய முடிகிறது. இந்த ஆட்சியாளர்கள் நாட்டு மக்களின் அவயங்களை கூட விற்றுள்ளனர்.

நாட்டில் தற்போது முன்னெபோதும் இல்லாத வகையில் மனித -யானை மோதல் அதிகரித்துள்ளது. இதற்கு முன்னர் இந்த நிலைமை காணப்பட வில்லை. இருப்பினும் இன்று சடுதியாக அதிகரித்துள்ளது. காரணம் அரசாங்கத்தில் உள்ளவர்கள் வனப்பகுதிகளில் உள்ள இடங்களை அபகரித்து அங்கு கட்டடங்களையும் ஹோட்டல்களையும் நட்சத்திர விடுதிகளையும் அமைத்துள்ளனர்.

இதன் காரணமாக யானைகள் வனப்பகுதிகளை விட்டு வெளியேறுகிறது. அத்தோடு அவற்றினால் மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மின்வேலிகளும் முறையாக நிர்மாணிக்கப்படவில்லை.

எனவே பாராளுமன்றத்தில் உள்ள 225 பேருக்கும் மக்கள் முன்னிலையில் வந்து உரையாட முடியாது. அதற்கான உரிமையோ அல்லது தகுதியோ அவர்களிடம் இல்லை என்பதை நாட்டு மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியல்வாதிகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு முகங்களில், வெவ்வேறு கட்சிகளினூடாக வருகை தருவார்கள்.

அதற்கு நாட்டு மக்கள் ஒரு போதும் ஏமாறக்கூடாது. மக்களுடன் இணைந்து மோசமான ஆட்சியாளர்களிடத்திலிருந்து நாட்டை மீட்பதற்கு நாம் தொடர்ந்தும் செயற்படுவோம் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# மசகு எண்ணெய் விலை உயர்வு

இஸ்ரேல்- பாலஸ்தீன ஹமாஸுக்கு இடையேயான யுத்தம் காரணமாக ஆசிய சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ளது.

தற்போதைய யுத்தத்தின் காரணமாக மசகு எண்ணெய் விலை அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்பட்டது. இதன்படியே ஆசிய சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ளது.

ஆசிய சந்தையில் தற்போது மசகு எண்ணெய் விலை 4 டொலர்கள் அதிகரித்து விற்பனை செய்யப்படுகிறது. (நி-5-6)

# மிளகாய்ப்பொடி தூவி 45 இலட்சம் கொள்ளை

(கொழும்பு)
மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில் தனது வியாபாரத்தை முடித்துவிட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வர்த்தகர் ஒருவரை மிளகாய்ப் பொடியால் தாக்கி அவரிடம் இருந்து சுமார் 45 இலட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை குறித்த வர்த்தகர் தனது வர்த்தக இடத்தை மூடிவிட்டு தனது முச்சக்கர வண்டியில் மற்றுமொரு ஊழியரை அழைத்துக் கொண்டு மீகொட தம்மமாவத்தை பகுதியில் உள்ள அவரது வீட்டிற்கு செல்லும் வழியில் மெகொட சிறிரத்தன மாவதையில், வேறொரு முச்சக்கர வண்டியில் வந்த ஒருவர் மிளகாய்ப் பொடியை வர்த்தகர் முகத்தில் தூவிவிட்டு அவரிடமிருந்த பணப் பொதியுடன் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

# இலங்கையர் தொடர்பில் அறிய '1989' ஐ அழையுங்கள்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

(ஜெருசலேம்)
இஸ்ரேல் நாட்டில் பணி புரிந்துவரும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இரு நாட்டு அரசும் இணைந்து புதிய நடவடிக்கை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், தொழில் புரியும் இலங்கையர்களின் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கெனவே தூதரகத்தில் இரண்டு அதிகாரிகள் முழுநேர கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைவெளிநாட்டுவேலை வாய்ப்பு பணியகத்தின் பிரதி முகாமையாளர் காமினி செனரத் தெரிவித்தார்.

அதேவேளை, இஸ்ரேலில் இருக்கும் இலங்கை உறவுகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அரசாங்கம் தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, இஸ்ரேலில் இருக்கும் இலங்கை உறவுகளின் பாதுகாப்பு தொடர்பாக எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றால் அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு 1989 என்ற இலக்கத்துக்கு தொடர்புகளை மேற்கொண்டு தேவையான தகவல் தொடர்பான புகார்களை வழங்கினால் தூதரகம் ஊடாக அது தொடர்பான தகவல்களை கேட்டறிந்து உரிய முறையில் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலில் இலங்கையர்கள் தொழில் புரியும் இடங்களில் ஏதேனும் பிரச்சினை நேர்ந்தால் அவர்கள் 0094 716640560 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு தகவல் வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இஸ்ரேனிலுள்ள இலங்கை ஊழியர்களின் பாதுகாப்புத் தொடர்பிலான விடயங்களை கண்டறியத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அமைச்சர் மனுஷ நாணயக்கார பணிப்புரை விடுத்துள்ளார்.

இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் பாதுகாப்பில் இலங்கை அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகக்கிண்ண கிரிக்கெட்

# நெதர்லாந்தை வீழ்த்தியது நியூசிலாந்து





சான்ட்னரின் அசத்தலான சுழல் பந்து கைகொடுக்க, நியூசிலாந்து அணி 99 ஓட்டங்களால் நெதர்லாந்தை இலகுவாக வீழ்த்தியது.

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஆறாவது போட்டி நேற்று இடம்பெற்றது.

இப்போட்டியில் நியூஸிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அணி சார்பில் அதிகபடியாக வில் யங் 70 ஓட்டங்களையும் டொம் லதம் 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில், நெதர்லாந்து அணியின் ரோலோஃப் வென் டெர் மெர்வ் 56 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 323 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களை மாத்திரம், பெற்று தோல்வியை தழுவியது.

அணி சார்பில் அதிகபடியாக கொலின் அக்கர்மேன் 69 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், நியூசிலாந்து அணியின் மிட்செல் சான்ட்னர் 59 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். (ம-7)




தீவிர பயிற்சியில் இங்கிலாந்து அணியின் ஸ்ரோக்ஸ்




# உலக அஞ்சல் தின கிரிக்கெட் போட்டி கரவெட்டி பிரதேச செயலகம் வெற்றி







உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சலகம் நடத்திய வடமராட்சிக் குட்பட்ட அரச நிறுவனங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணி 36 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

7 வீரர்கள் 5 ஓவர்கள் கொண்ட இச்சுற்றுப்போட்டியில் 8 அணிகள் பங்குபற்றி இருந்தன. இறுதிப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணியும் வல்வெட்டித் துறை த்பாலக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி பிரதேச செயலக அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 63 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கே.ரமேஷ் 23 ஓட்டங்களையும் கி.கஜீபன் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை தபாலக அணி 5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 27 ஓட்டங்களை பெற்றனர் இதில் வி.பிரணவன் 10 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். கரவெட்டி பிரதேச செயலக அணி சார்பில் கேசவன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி இருந்தார்.

இப் போட்டியில் சிறந்த பந்து வீச்சாளர் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரராக கரவெட்டி பிரதேச செயலக அணியைச் சேர்ந்த முறையே கஜீவன் மற்றும் கேசவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை தபால் அதிபர் அ.அருளானந்தசோதி தலைமையில் நடைபெற்ற இப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் கு.செந்தில்குமார், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர் மா.முரளி பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வல்வெட்டித் துறை தபால் அதிபர் ரகுபதி ஆகியோர் பரிசில்களை வழங்கிவைத்தனர்.

(60.90)




# மகாஜனா சம்பியன்



கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரியின் 17 வயதுப் பிரிவு அணி சம்பியனாகியுள்ளது.

இப்போட்டி நேற்று திங்கள் காலை 9.30 மணிக்கு யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் குருநாகல் கவுசிகம மத்திய கல்லூரியை எதிர்கொண்ட மகாஜன 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மகாஜனா முதல்பாதி ஆட்டத்தில் ஒரு கோலையும் இரண்டாவது பாதியாட்டத்தில் 2 கோல்களையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104,105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கல்விசார் ஆய்வு மாநாடு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.
(படங்கள்: சிவசாந்தன்)


## 65 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு டெங்கு இந்த வருடத்தில் இதுவரை 38 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் கடந்த வாரத்தில் மாத்திரம் 198 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்குநோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. இந்நிலையில் 7 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் அதி அவதானம் மிக்க பகுதிகளாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் இதுவரையான காலப் பகுதியில் 754 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வருடத்தில் 65ஆயிரத்து 247 பேர் இதுவரை டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 38 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்


திரு.க.கமலநாதன்
பணிப்பாளர் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம் (வ.மா)


திரு.வே.பிரதீஸ்குமரன்
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்


திரு.சி.குணாளன்
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கிளிநொச்சி

யாழ்.மாவட்டத்தில் கடமை புரிந்த சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூவருக்கு திறமை அடிப்படையில் நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்வுக்கு அமைய மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது இவர்கள் தங்கள் சேவையை மேலும் சிறப்பாக மேற்கொள்ள எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புடன்: பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள்,
சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்,
மின்சார நிலைய வீதி, சுன்னாகம் (சி-7405)

## உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

### அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

### தொடர்புகளுக்கு:

தொலைபேசி:
076 097 3127
021 221 7603
Viber/ Whatsapp: 076 636 3378
E.mail:
Valampurii@yahoo.com


## இராசிபலன்

10.10.2023
புரட்டாதி23, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பிற்பகல் 4.47 மணிவரை

ஆயிலியம் காலை 8.18 மணிவரை
சுபநேரம் 10.32-12.02மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்-உத்தராடம், திருவோணம்
உலக உள நல தினம்.
வளவன்

**மேஷம்**: சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்**: எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, தேக நலனில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்**: புதிய முயற்சிகள் கைகூடும், குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்**: நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுக்முண்டு.

**ரிஷபம்**: வழிபாடு குதூகலம் தரும், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்**: திடீர் பயணமொன்று ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மாற்றங்கள் ஏற்றம் காணும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்**: சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கும்பம்**: தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்.

**மிதுனம்**: உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும், இனிய செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**கன்னி**: பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு**: கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**மீனம்**: பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

பத்து விரல்களும் பதறாது உழைத்தால் அஞ்சு விரலால் அஞ்சாது சாப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் வாள்வெட்டு இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்லூர் அரசடிப் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த குறித்த நபர் சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் வெள்ளை நிற காரில் வந்த நான்கு பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞன் ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-33)

## வருமான பரிசோதகர் சங்கத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வருமானப் பரிசோதகர்கள் சங்கத்தின் வடக்கு மாகாண அங்குரார்ப்பண பொதுக்கூட்டமானது யாழ். பொது நூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் கலந்து கொண்டு வருமானப் பரிசோதகர்களது தொழிற் சங்க கோரிக்கைகளை நிறைவேற்ற தன்னாலான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக உறுதியளித்தார்.

மேலும் தொழிற்சங்கத்தின் முதலாவது நிர்வாக சபையின் தலைவராக ச.போல்தர்சாந், செயலாளராக கோ.ஜெகஜீவன், பொருளாளராக திருமதி. ஜோ.ஆரினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (நி-5-6-33)

# குறைவடைந்து செல்லும் குருதிக் கொடையாளர்கள்

## மருத்துவர் ஜெயபாஸ்கரன் கவலை

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாவட்டத்தில் அண்மைய நாட்களில் இரத்த தானத்தை ஒழுங்கு செய்கின்ற ஒருங்கிணைப்பாளர்களும் தாமாக முன் வந்து இரத்ததானம் வழங்குபவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து கொண்டு செல்வதாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் இரத்த வங்கி மருத்துவர் ஜெயபாஸ்கரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாடு செல்கின்ற இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமையும் ஒரு காரணமாக இருக்கலாம்.

தேக ஆரோக்கியமாக உள்ளவர்கள் எந்த நேரமும் நான்கு மாதத்திற்கு ஒரு தடவை இரத்தானத்தை வழங்கிச் செல்ல முடியும். நாம் அனைத்து பரிசோதனைகளையும் மேற் கொண்ட பின்னரே உங்களிடமிருந்து இரத்தம் பெற்றுக் கொள்கின்றோம்.

இரத்ததானம் கொடுப்பதன் மூலம் உங்களுடைய ஆரோக்கியமானது வருடத்திற்கு ஒரு தடவையாவது பரிசோதிக்கப்படுகின்றது. அதே நேரம் உடல் ஆரோக்கியமும் இதன் மூலம் உறுதி செய்து கொள்ளப்படுகின்றது. மேலும் இரத்தம் வழங்குவது அளப்பரிய சேவையாக இருக்கும் என அவர் தெரிவித்தார். (நி-5-6-33)

# சுகாதார சீர்கேடுகளுடன் காணப்படும் கூடைப்பந்தாட்ட திடல்

## உரிய தரப்பினரை கவனம் செலுத்துமாறு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தேசிய மட்ட கூடைப்பந்தாட்ட போட்டிகள் நடைபெறும் கூடைப்பந் தாட்ட திடல் அமைந்துள்ள பகுதிகள் சுகாதார சீர்கேடுகள் நிறைந்து காணப்படுவதனால் போட்டியில் கலந்து கொள்ள வருபவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். யாழில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமான தேசிய மட்ட கூடைப்பந்தாட்ட போட்டிகளில் பங்கேற்பதற்காக நாட்டின் ஏனைய பாகங்களில் இருந்தும் வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் வருகை தந்துள்ள நிலையில் போட்டி நடைபெறவுள்ள மைதானத் திடல் பகுதிகளில் அதிகளவான குப்பைகள், பொலித்தீன்கள், வெற்று பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளிட்ட கழிவுப் பொருட்கள் பெருமளவில் காணப்பட்டன.

இதேவேளை மலசல கூடங்கள் பாவிக்க முடியாத அளவுக்கு சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுவதால் போட்டிகளில் கலந்து கொள்ள வந்துள்ளவர்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், போட்டிஏற்பாட்டாளர்கள் அப்பகுதிகளை சுத்தம் செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். என்பதுடன் கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கும், அவற்றை தரம் பிரித்து போடுவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்யுமாறும் போட்டியில் கலந்து கொண்டுள்ளவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-33)

# ஹெரோயினுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் போதைப் பொருளுடன் இரு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்.செல்வபுரம் பகுதியில் கோப்பாய் பொலிஸார் விசேட நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்தனர்.

அதன் போது அப்பகுதியில் நடமாடிய இளைஞர்களை சோதனையிட்ட போது, 24 வயதுடைய இளைஞன் ஒருவரின் உடைமையில் இருந்து 250 மில்லி கிராம் ஹெரோயினும், 22 வயதுடைய மற்றுமொரு இளைஞனின் உடைமையில் இருந்து 150 மில்லி கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டது.

அதனையடுத்து பொலிஸார் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 450 | 400 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 140 | 150 | 160 |
| கோவா | 200 | 150 | 150 | 200 |
| கரட் | 180 | 300 | 260 | 300 |
| பூசணி | 80 | 80 | 60 | 100 |
| புடோல் | 80 | 80 | 100 | 160 |
| வாழைக்காய் | 200 | 180 | 150 | 300 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 250 | 300 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 800 |
| வெண்டக்காய் | 120 | 140 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 300 |
| லீக்ஸ் | 160 | 170 | 150 | 200 |
| பீற்றூட் | 120 | 140 | 140 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 100 | 150 |
| போஞ்சி | 400 | 480 | 450 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 60 | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1300 | 1200 | 1800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 400 | 450 | 500 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 400 | 450 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 140 |



கொழும்பு றோயல் கல்லூரியினால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான வேத்தியர் சவால் கேடய விவாதப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

(படம்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### 2024 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 10.10.2023 - 23.10.2023 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி - 24.10.2023 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 24.10.2023 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 12,553,700.00 | |
| 2 | சுன்னாகம் பொதுச் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 500,000.00 | |
| 3 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 181,720.00 | |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1,000.00 | 10,000.00 | 3,586,000.00 | 250.00 |
| 5 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 391,120.00 | 250.00 |
| 6 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 165,000.00 | 250.00 |
| 7 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 55,000.00 | 250.00 |
| 8 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 275,605.00 | 250.00 |
| 9 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 220,000.00 | 250.00 |
| 10 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 197,230.00 | 250.00 |
| 11 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 67,925.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை | 3,000.00 | 30,000.00 | 30,321,120.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை வாகன தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 2,700,000.00 | |
| 3 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 55,165.00 | |
| 4 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 870,100.00 | 250.00 |
| 5 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 320,100.00 | 250.00 |
| 6 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 70,400.00 | |
| 7 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 60,500.00 | |
| 8 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 407,550.00 | 250.00 |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 1,855,700.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 270,930.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |
| 4 | ஏழாலை மயிலங்காடு பொதுச்சந்தை | 750.00 | 7,500.00 | 687,501.10 | |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2023.11.10 ஆம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2023.11.10 ஆம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
5. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
6. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
7. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
9. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
10. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
11. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
12. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
13. இணுவில் வாராந்தச் சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத் தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
14. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி.சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்,வலிகாமம் தெற்கு பிரதேசசபை,சுன்னாகம்.**

# ஆட்டோ உரிமையாளர்கள் நாளை கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் நாளை புதன்கிழமை மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ். மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாளை புதன்கிழமை காலை பண்ணையில் அமைந்துள்ள தூர இடங்களுக்கான பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் பேரணியானது யாழ். நகரில் உள்ள வீதி வழியாக வருகை தந்து இறுதியில் கடற்றொழில் அமைச்சரிடம் மகஜர் ஒன்றினையும் கையளிக்கவுள்ளதாக முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

குறிப்பாக அண்மைய நாட்களில் யாழ்.மாவட்டத்தில் புதிய செயலி மூலம் முச்சக்கர வண்டி சேவையினை மக்கள் பயன்படுத்தி வருவதன் காரணமாக நீண்டகாலமாக முச்சக்கர வண்டியினை தமது வாழ்வாதாரமாகக் கொண்டு செயற்படுபவர்கள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ள நிலையில் குறித்த போராட்டமானது முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தினரால் முன்னெடுக்கப்படவுள்ளது. (நி-5-6-33)

# கலாசாலை நூற்றாண்டு நிறைவு விழாவில் கல்வி அமைச்சர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி நல்லூர் கோவில் பின்புறத்தில் இருந்து பருத்தித்துறை வீதி வழியாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை வரை இன்று செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபவனி இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நிறைவு விழா இடம்பெறவுள்ள நிலையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் முன்னிலையில் கலாசாலையின் நூற்றாண்டு சஞ்சிகையாகிய கலைமலர் வெளியீடு அஞ்சல் திணைக்களத்தின் இருபத்தைந்து ரூபா முத்திரை வெளியீடு மற்றும் முதல்நாள் அஞ்சல் உறை வெளியீடு, முன்னாள் அதிபர்மார் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளன எனவும் கலாசாலை அதிபர் ச.லலீசன் அறிவித்துள்ளார். (நி-5-6-33)

# மேலும் உயர்ந்துள்ள டொலரின் பெறுமதி

(கொழும்பு)

டொலரின் பெறுமதியில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்று நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 328.93 ரூபாவாகவும் கொள்வனவு விலை 318.30 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 242.63 ரூபாவாகவும் கொள்வனவு விலை 231.74 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 349.47 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 334.61 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் விற்பனை பெறுமதி 403.46 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 387.83 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5-6)

# முல்லைத்தீவில் ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவில் ஐஸ் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் முல்லைத்தீவு விமானப்படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


**கைது செய்யப்பட்ட குறித்த நபர் முள்ளியவளை** பகுதியை சேர்ந்த 20 வயதுடையவர் எனவும் , இவரிடம் இருந்து 486 கொக்கேய்ன் போதை மாத்திரைகளும், 34 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது மேலும் கைது செய்யப்பட்ட குறித்த இளைஞனை நீதி மன்றில் முற்படுத்தப்பட்டு பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இஸ்ரேலுக்கு ஆதரவாக க

## உச்சமடையும் பதற்றம்; உ



(வோஷிங்டன்)

**இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கி தரைக் கடல் பகுதிக்கு அமெரிக்கா போர் கப்பல்க வைத்துள்ளது.**

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலின் ஜெருசலேமை கைப்பற்றும் நோக்கில் இஸ்ரேல் மீது கடந்த சனிக்கிழமை அதிகாலையில் இருந்து ஆயிரக்

## ஹமாஸ் அழிக்கப்படும் இஸ்ரேல் திட்டவட்டம்



(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனக் கிளர்ச்சித் தரப்பான ஹமாஸ்க்கும் இடையே நடக்கும் சண்டையில் 1,100 பேர் மாண்டதற்குப் பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதியளித்துள்ளார்.

மக்கள் அச்சத்தில் காசாவை விட்டு வெளியேறுவதாகக் கூறப்பட்டது. இந்நிலையில் ஹமாஸ் அழிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

50 ஆண்டுகளில் இரு தரப்புக்கும் நடக்கும் கடுமையான மோதல் இது எனக் கருதப்படுகிறது.

பாலஸ்தீன ஹமாஸ் கிளர்ச்சிக் குழுவினர் நடத்திய திடீர்த்தாக்குதலைத் தொடர்ந்து நிலவரத்தைத் தங்களின் முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இஸ்ரேல் சிரமப்படுகிறது.

ஐக்கிய நாட்டுப் பாதுகாப்பு மன்றத்தின் பல உறுப்பு நாடுகள் இஸ்ரேல்மீதான தாக்குதலைக் கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஆப்கானிஸ்தான் நிலநடுக்கத்தால் உயிரிழப்பு 2445 ஆக அதிகரிப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் ஹெராட் பகுதியின் வடமேற்கே 40 கிலோமீற்றர் தொலைவில் 6.3 ரிக்டர் அளவில் பாரிய நிலநடுக்கம் ஒன்று கடந்த சனிக்கிழமை ஏற்பட்டது. இதன் பின்னர் தொடர்ச்சியாக பல நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

இந்த நிலநடுக்கங்களால் தற்போதுவரை 2,445 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காணாமல் போயுள்ளனர் எனவும் 1,200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,320 வீடுகளும் 135 கட்டடங்கள் முழுமையாக தரைமட்டமாகியுள்ளதுடன் 500 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## உடனடியாக போரை நிறுத்துமாறு பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோள்



(வோஷிங்டன்)

இஸ்ரேல் - ஹமாஸ் போர் குறித்து கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் புனித பாப்பரசர் பிரான்சிஸ் வேதனை தெரிவித்துள்ளார்.

இதன்படி "இஸ்ரேலில் தற்போது நடப்பது அச்சமும் வேதனையும் அளிப்பதோடு பயங்கரவாதம் தீர்வுகளை கொண்டுவருவதில்லை, மரணத்தை மட்டுமே கொண்டு வருகின்றது

ஒவ்வொரு போரும் தோல்விதான். எனவே போரை உடனடியாக நிறுத்தும்படி இருதரப்பையும் வேண்டுகிறேன்" எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-5-6)

## பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அமெரிக்க பேராசிரியர் கிளாடியா கோல்டின்



(ஸ்டாஹோம்)

2023 ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிவியல் நோபல் பரிசு, அமெரிக்க பேராசிரியர் கிளாடியா கோல்டினுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

"தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்களிப்பு பற்றிய புரிதலை மேம்படுத்தியதற்காக" கிளாடியா கோல்டினுக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1946 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் பிறந்த கிளாடியா கோல்டின், ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ளார்.

பெண்களின் வருவாய் மற்றும் தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்கு குறித்து விரிவான ஆய்வை மேற்கொண்டுள்ளார்.


இவரது ஆராய்ச்சி 200 ஆண்டுகளாக தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்கேற்பு எப்படி மாறியுள்ளன என்பதையும் வருவாய் மற்றும் வேலை வாய்ப்பு விகிதங்களில் பாலின வேறுபாடுகள் எப்படி உள்ளன என்பது பற்றிய தரவுகளை வழங்கியுள்ளது என நோபல் பரிசு வழங்கும் திராயல் ஸ்வீடிஷ் அக்கடமி தெரிவித்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## களமிறங்கும் அமெரிக்கா

## ...ற்றுநோக்கும் சர்வதேசம்



... கிழக்கு மத்திய
...ல்களை அனுப்பி

கணக்கான ரொக்கெட்டுகளை ஏவி தாக்குதல் நடத்தியது.

இதையடுத்து பதிலடி தாக்குதலை தொடங்கிய இஸ்ரேல், தனது அதிகாரபூர்வமான போர் பிரகடனத்தை அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் இராணுவப்படையினர் பாலஸ்தீனத்தின் மீது தொடர் வான் தாக்குதலை நடத்தி காசா நகரை உருக்குலைத்து வருகின்றனர்.

இந்த மோதலில் இரு நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்து இருப்பதுடன், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக தனது விமானம் தாங்கி போர் கப்பல்களை கிழக்கு மத்தியதரைக் கடல் பகுதிக்கு அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது.

அதில் அமெரிக்காவின் விமானம் தாங்கிய போர் கப்பல் யூ.எஸ்எஸ் ஜெரால்ட் ஆர்ஃபோர்ட் (சிவிஎன்-78), டிகோண்டெரோகா-கிளாஸ் க்ரூஸர் யுஎஸ்எஸ் நார் மண்டி (சிஜி-60) மற்றும் ஆர் லீ பர்க் - கிளாஸ் டிஸ்ட்ராயர்ஸ் யுஎஸ்எஸ் ராமேஜ் ஆகியவற்றை உள்ளடக்கிய "கேரியர் ஸ்ட்ரைக் குரூப்பின்" 12 கப்பல்கள் (DDG-61), USS Mcfaul (DDG-74) மற்றும் USS தாமஸ் ஹட்னர் (DDG-116) ஆகியவை இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கிழக்கு மத்திய தரைக் கடல் பகுதிக்கு அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது.

மேலும் இந்த போர் கப்பல்கள் தேவைப்பட்டால் அமெரிக்க மக்களை வெளியேற்ற பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## சுமார் 123,000 பேர் காசாவிலிருந்து இடப்பெயர்வு

### ஐ.நா அறிவிப்பு



(ஜெருசலேம்)

இஸ்ரேல் மீது ஹமாஸ் திடீரென நடத்திய ரொக்கெட் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் பதிலடித் தாக்குதலை தொடங்கியுள்ளது.

வீடுகள் மற்றும் அடுக்குமாடி கட்டடங்களை குறிவைத்து வான் மற்றும் செல் தாக்குதல்களை இஸ்ரேல் படைகள் நடத்தியுள்ளன.

இதன் காரணமாக காசாவில் இருந்து சுமார் 123, 538 பாலஸ்தீனியர்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஐ.நா மனிதாபிமான அமைப்பு தெரிவித்துள்ளது.

வீடுகளை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டவர்களில் பலர் கடலோரப் பகுதியில் உள்ள சுமார் 64 பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இஸ்ரேலிய தாக்குதல்களில் பல அடுக்குமாடி குடியிருப்புகளும் அடங்குவதாக மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## இரத்த பூமியாக மாறியுள்ள இஸ்ரேல் 700 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு



(ஜெருசலேம்)

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகளால் இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில், இசை நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட 250 பேர் உட்பட 700 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் 2000 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதோடு பலர் பணயக் கைதிகளாக காசாவில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

## இஸ்ரேல் விமான நிலையத்தை இலக்கு வைத்து தாக்குதல்



(ஜெருசலேம்)

இஸ்ரேலின் பென்குரியன் விமானநிலையத்தை இலக்குவைத்து ஹமாஸ் ரொக்கெட் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இஸ்ரேலின் மத்திய பகுதி மற்றும் டெல்அவிவின் புறநகர் பகுதிகளில் பாரிய வெடிப்பு சத்தங்கள் கேட்டுள்ளன.

இஸ்ரேலின் தென்பகுதி நகரமான அஸ்கெலென் மீது 100இற்கும் மேற்பட்ட ரொக்கெட் தாக்குதல்களை மேற்கொண்டதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## காசா முனை எல்லையில் ஒரு லட்சம் வீரர்கள் குவிப்பு

### மற்றுமொரு தாக்குதலுக்கு தயாராகும் இஸ்ரேல்



(ஜெருசலேம்)

பாலஸ்தீனிய பகுதியின் காசா முனை எல்லையில் இஸ்ரேல் 1 லட்சம் வீரர்களை குவித்துள்ளது. இதன் மூலம் காசா மீது மேலுமொரு தாக்குதலினை இஸ்ரேல் நடத்த திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

காசாவில் உள்ள ஹமாஸ் பயங்கரவாதிகளின் இருப்பிடங்கள், கட்டடங்கள் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகின்றது.

இந்த நிலையில் காசா எல்லையில் இராணுவ தாங்கிகள், ஆயுதங்களுடன் 1 லட்சம் இஸ்ரேலிய வீரர்களை குவித்துள்ளனர்.

இதன் மூலம் காசாவுக்குள் நுழைந்து தரைவழி தாக்குதல்களை இஸ்ரேல் நடத்த தயாராகி வருவதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுகேது பெயர்ச்சிப் பலன்கள்

## 08.10.2023-25.04.2025

# குறுக்கீடு சக்திகள் அகன்று உடல்நலம் சீராகும்!



**மிதுன இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், அக்டோபர் 8 ஆம் திகதி முதல் 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார்.

அதேநேரம் கேது பகவான் 4 ஆம் இடத்திற்கு வருகிறார். ஒன்றரை ஆண்டு காலம் இந்த இடத்தில் இருந்தபடியே ராகு-கேது இருவரும் நட்சத்திரப் பாதசாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழங்குவார்கள்.

10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகும் இராகுவால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொழிலில் இருந்த தடைகள் அகலும். கொடுக்கல்- வாங்கல் சுமுகமாகும்.

புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து ஆச்சரியப்பட வைக்கும். "வேலைக்கு செல்வதா? அல்லது தொழில் செய்வதா?" என்று குழம்பியவர்களுக்கு தெளிவு பிறக்கும். "செய்யும் தொழிலை விரிவு செய்ய, போதுமான மூலதனம் கிடைக்கவில்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு, அதற்கான வாய்ப்பு உருவாகும். ஒரு சிலருக்கு தள்ளிப்போன பதவி உயர்வு கிடைக்கப்பெறும்.

சுகஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால், ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்படும். தகுந்த ஓய்வு, உடல்நலத்தை சீராக்கும். பஞ்சாயத்து முதல் பாராளுமன்றம் வரையான போட்டிகளில் வெற்றி கிடைக்கும். பயணங்கள் அதிகரிக்கும்.

**குரு மற்றும் சனி வக்கிர காலம்**

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ இராசியிலும் 25.9.2024 முதல் 22.1.2025 வரை ரிஷப இராசியிலும் குரு வக்கிரம் பெறுகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரமடைவது நன்மைதான். திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். குடும்ப முன்னேற்றம் கூடும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும் 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்ப இராசியிலும் சனி வக்கிரம் பெறுகிறார். இந்த கால கட்டத்தில் வியாபாரம் வெற்றி நடை போடும். வீடு மாற்றம் நன்மை தரும்.

அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். வெளிநாடு செல்லும் முயற்சி அனுகூலமாகும். உத்தியோகத்தில் இடமாற்றம், இலாகா மாற்றம் உறுதியாகலாம்.

**சனிப்பெயர்ச்சி காலம்**

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் செல்கிறார். அவர் பாக்கிய ஸ்தானத்திற்கு வருவதால் உங்க




ளுடைய அஷ்டமத்துச் சனி விலகி விட்டது. எனவே குறுக்கீடு சக்திகள் அகலும். உடல்நலம் சீராகி உற்சாகப் படுத்தும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும். பொதுவாழ்வில் மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். தன வரவு திருப்திகரமாக இருக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

**குருப்பெயர்ச்சி காலம்**

1.5.2024 அன்று ரிஷப இராசிக்கு குரு செல்கிறார். அவரது பார்வை உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகிறது. நீங்கள் எந்தத் துறையில் ஈடுபட்டிருந்தாலும் அதில் மாற்றம் உண்டு. வரும் மாற்றம் நல்ல மாற்றமாகவே அமையும். வீடு, மனை சேர்க்கை உண்டு. கட்டிய வீட்டை பழுது பார்க்கும் சூழல் சிலருக்கு ஏற்படும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும் நேரம் இது.

**பெண்களுக்கான பலன்கள்**

ராகு- கேது பெயர்ச்சியின் விளைவாக எண்ணற்ற மாற்றங்களைச் சந்திக்கப் போகிறீர்கள். குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழில் முன்னேற்றம் உண்டு. கடன் சுமை குறையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பெயரிலேயே சொத்து வாங்கும் யோகம் வாய்க்கும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

பத்தாமிடத்து இராகுவால் தொழில் வளம் மேலோங்கவும் நான்காம் இடத்து கேதுவால் நலங்கள் யாவும் வந்து சேரவும் திருமால் - திருமகள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

# இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும்!



**கடக இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், அக்டோபர் 8 ஆம் திகதி முதல் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். அதே நேரம் கேது பகவான் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்திற்கு வருகிறார். அடுத்து வரும் ஒன்றரை ஆண்டுகள் இவர்கள் இருவரும் தாங்கள் சஞ்சரிக்கும் நட்சத்திர பாதசாரங்களின்படி பலன்களை வழங்குவார்கள்.

ராகு பகவான் 9 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். இதனால் உங்கள் பாக்கிய ஸ்தானம் பலப்படுகிறது. தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். தந்தை வழி உறவால் ஆதாயம் உண்டு. தர்ம காரியம் செய்யும் வாய்ப்பு கிடைக்கும். பங்காளிகள் பக்கபலமாக இருப்பர். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. மங்கல காரியங்கள் மனையில் நடைபெற வழிபிறக்கும்.

3 ஆம் இடத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, ஆன்மிகப் பணிகளை அதிகம் செய்ய நேரிடும். கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். முன்னோர் கட்டிவைத்து சிதிலமடைந்த கோவில்களை மீண்டும் சரிசெய்து குடமுழுக்கு விழா செய்யும் யோகம் கூட ஒருசிலருக்கு கைகூடும். பொருளாதாரத்தில் இதுவரை இருந்த பற்றாக்குறை அகலும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாக முடியும். புதிய முயற்சிகள் வெற்றியாகும்.

**குரு மற்றும் சனி வக்கிர காலம்**

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ இராசியிலும் 25.9.2024 முதல் 22.1.2025 வரை ரிஷப இராசியிலும் குரு வக்கிரம் பெறுகிறார். குரு வக்கிரம் பெறுவது ஒரு வகையில் நன்மைதான் என்றாலும் அவர் பாக்கியாதிபதியாகவும் இருப்பதால் திடீர் திடீரென விரயங்கள் ஏற்படும். பிள்ளைகளால் பிரச்சினைகள் அதிகரிக்கும். பெற்றோரின் ஆதரவு குறையும். உத்தியோகத்தில் உங்கள் முன்னேற்றத்திற்கு மேலதிகாரிகள் ஒத்துழைப்பு செய்வர்.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும் 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்ப இராசியிலும் சனி வக்கிரம் பெறுகிறார். அவர் வக்கிரம் பெறும் காலங்களில், குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். இருப்பினும் அஷ்டமத்துச் சனிவக்கிரம் பெறுவது ஒரு வகைக்கு நன்மைதான். சுபச்செலவு அதிகமாகும்.

**சனிப்பெயர்ச்சி காலம்**

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சனி




பகவானால் தடை, தாமதங்களை சந்திப்பீர்கள். மனதில் நினைத்ததை செய்ய இயலாது. கருத்து வேறுபாட்டால் பகை உருவாகலாம். பிறருக்கு பொறுப்பு சொல்வதை தவிர்ப்பது நல்லது. தொழிலில் "போதுமான மூலதனம் இல்லையே" என்று கவலைப்படுவீர்கள். எந்த ஒரு விஷயத்தையும் உங்கள் நேரடிப் பார்வையில் செய்யுங்கள். மருத்துவச் செலவு அதிகரிக்கும்.

**குருப்பெயர்ச்சி காலம்**

1.5.2024 அன்று ரிஷப இராசிக்கு குரு செல்கிறார். அவர் உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய மூன்று இடங்களையும் பார்க்கப்போகிறார்.

அந்த வகையில் சகோதர வழியில் ஒற்றுமை ஏற்படும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். கடன் சுமை குறையும். பழைய பங்குதாரர்கள் விலகினாலும் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். பொருளாதாரம் உயரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

ராகு- கேது பெயர்ச்சியின் விளைவாக குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். கணவன் - மனைவி இருவரும் விட்டுக்கொடுத்துச் செல்வது நன்மை தரும். பணம் வந்த மறு நிமிடமே செலவாகிவிடும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. பிள்ளைகள் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். உங்கள் பணியை மற்றவரிடம் ஒப்படைக்க வேண்டாம்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

9 ஆம் இடத்து ராகுவால் உன்னதமான பலன் கிடைக்கவும் 3 ஆம் இடத்து கேதுவால் முன்னேற்றம் கூடவும் நாக தெய்வங்களை வழிபாடு செய்யுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராயில் வீடு உடைத்து திருடிய மூவர் கைது

## 7 லட்சம் பெறுமதியான பொருட்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் வீடு உடைத்து பொருட்கள் திருடிய மூவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஏழு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வீட்டு உரிமையாளர் மட்டக்களப்பு உறவினர்களின் வீட்டுக்கு சென்று நீண்ட நாட்கள் கழித்து வந்த பின் வீட்டினை திறந்து பார்த்தபோது வீடு உடைக்கப்பட்டு இருந்ததை அவதானித்த அவர் குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்தார்.

குறித்த முறைப்பாட்டினையடுத்து விசாரணை செய்த கோப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் மூன்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளதோடு குறித்த வீட்டில் திருடப்பட்ட ஏழு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சுன்னாகம், உரும்பிராய் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் மேலும் இருவர் குறித்த சம்பவத்துடன் தொடர்பட்டுள்ளதோடு தலைமறைவாகியுள்ளதாகவும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் கைது செய் யப்பட்டவர்களிடமிருந்து விலையுயர்ந்த தொலைக்காட்சி, மின் மோட்டர், மடிக்கணினி மற்றும் தொலைபேசி, தோடு, மணிக் கூடு என்பன மீட்க்கப்பட்டுள்ளதோடு கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (நி-5-6-33)

# அபிவிருத்தி எனும் பெயரில் இயற்கை வளங்கள் அழிப்பு

## மன்னார் மறைமாவட்ட ஆயர்

(மன்னார்)

அபிவிருத்தி எனும் பெயரில் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும், அழிக்கப்படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் கரித்தாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் நேற்று மன்னார் வாழ்வுதயத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


அபிவிருத்தி எனும் பெயரில் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும், அழிக்கப்படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது. மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களுக்கு அச்சுறுத்தலான கனியவள அகழ்வு, காற்றாலை திட்டம், சட்ட விரோத மண் அகழ்வு இந்திய இழுவைப் படகுகளில் அத்து மீறிய நுழைவு, காடழிப்பு, கடலோர கண்டல் தாவரங்கள் அழிப்பு, வன விலங்குகள் சரணாலயத்திற்கு சொந்தமான காணிகள் தனி நபர்களினால் அபகரிக்கப்படுதல் என்பன இடம்பெறுகின்றன. இது தொடர்பில் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். (நி-5-6-285)

# மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் கீழ் இயங்கும் மானிப்பாய், ஆனைக்கோட்டை, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய பொது நூலகங்கள் இணைந்து நடத்துகின்ற புத்தகக் கண்காட்சி இன்றும் நாளையும் மானிப்பாய் பிரதேச சபையின் ரவீந்திரன்-கலாசார மண்டபத்தில் காலை ஒன்பது மணி தொடக்கம் மாலை நான்கு மணிவரை இடம்பெறவுள்ளது. (நி-5-6)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆங்கில பாட ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி.சியாமளா-கஜேந்திரன் அவர்களின் பாசமிகு மகன்

அமரர். கஜேந்திரன் சங்கீர்த்தன்

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

(17400)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை புத்தூர்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2934

திலானி

சண்டேக்கும் மத்த நாளுக்கும் என்ன வித்தியாசம்?
மத்த நாள் புல்டோசர் மாதிரி போகும்.





சண்டே புல்லட் மாதிரி பறக்கும் சார்.

ஞானா

எட்டில் ஐந்து எண் கழியும் என்றும் ஐந்தில் எட்டு ஏன் கழியாது?



ஏன்னா, இப்படி கணக்கு தப்புத் தப்பா சொல்லி அடி வாங்குறேள்.

தர்மினி

உன் மனைவியாலதான் நீ குடிக்கிறதையே விட்டியா?



ஆமா,குடிச்சா அவ ரெண்டா தெரியுறா.
ஒருத்தியையே சமாளிக்க முடியல.
அதான் பயந்து போய் குடிக்கிறதையே விட்டுட்டேன்.

வசந்தன்

எப்படியாவது கடவுளோட அட்ரஸ் ஐ கண்டுபிடிச்சு அவருக்கு ஒரு ஆன்ட்ராய்டு போன் வாங்கி கொடுத்துடனும்.



அப்பத்தான் நம்ம வாழ்க்கையில விளையாடாம அவர் பாட்டுக்கு கேம் விளையாடிட்டு இருப்பார்.

நியாஷ்

மனக்கவலையை மறக்க ஓவியம் வரையலாம்.



எனக்கெல்லாம் இருக்கிற கவலைக்கு வரைஞ்சா சீன பெருஞ்சுவரே பத்தாதுடா.

தயாபரன்

மனுஷனா பொறந்தா எதையாச்சும் சாதிக்கனும்டா.



நல்லவேளை நான் குழந்தையா தான் பொறந்தேன்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 304





"இராவணர் காலத்து அசுரர்களைப்போல் இந்தக் காலத்து இலங்கை வீரர்களும் மாயாவிகளாகிவிட்டார்களா? மேக மண்டலத்தில் மறைந்து நின்று போரிடுகிறார்களா?"

"மாயாவிகளாய் மறைந்துதான் விட்டார்கள். ஆனால் போர் செய்யவில்லை. போரிட்டால்தான் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து விடலாமே? இலங்கை அரசன் மகிந்தனையும் காணவில்லை அவனுடைய சேனாவீரர்களையும் காணவில்லை. காடுகளிலே, மலைகளிலே எங்கே போய் ஒளிந்து கொண்டார்களோ தெரியவில்லை. ஆகையால் ஆறு மாதமாக இலங்கையில் யுத்தமே நடைபெறவில்லை. உங்களையும் அங்கே அனுப்பி என்ன செய்கிறது?"

"மகா மந்திரி! எங்களை அனுப்பிப் பாருங்கள்! மகிந்தனும் அவனுடைய வீரர்களும் காடு மலைகளிலே ஒளிந்திருக்கட்டும் அல்லது மேக மண்டலத்திலே ஒளிந்திருக்கட்டும் அவர்களைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வந்து இளவரசரின் காலடியில் சேர்க்கிறோம். அப்படிச் சேர்க்காவிட்டால், 'தெரிஞ்ச கைக்கோளர் படை' என்ற பெயரை மாற்றிக் கொண்டு 'வேளாளரின் அடிமைப்படை' என்ற பட்டயத்தைப் பெற்றுக் கொள்கிறோம்"

"வேண்டாம் வேண்டாம்! அப்படி ஒன்றும் இப்போது சபதம் செய்ய வேண்டாம்! தெரிஞ்ச கைக்கோளர் படையின் வீர பராக்கிரமம் இந்த ஜம்புத்வீபத்தில் யாருக்குத் தெரியாது? தஞ்சாவூர் சென்றதும் சக்கரவர்த்தியைக் கேட்டுக் கொண்டு உங்களுக்குக் கட்டளை அனுப்புகிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள். பாண்டிய நாட்டில் பகைவர்களை அடக்கி அமைதியை நிலைநாட்டி வாருங்கள்"

"மகா மந்திரி! பாண்டி நாட்டில் இனி அடக்குவதற்குப் பகைவர் யாரும் இல்லை. குடி மக்கள் யுத்தம் நின்றது பற்றி மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். அவரவர்களும் விவசாயம், வாணிபம், கைத்தொழில்களில் ஈடுபட்டு அமைதியான வாழ்க்கை நடத்துகிறார்கள். பாண்டிய மன்னர் குலமோ நாசமாகி விட்டது."

"அவ்விதம் எண்ண வேண்டாம். வீர பாண்டியனோடு பாண்டிய வம்சம் அற்றுவிட்டதாக நினைக்கிறீர்கள். அது தவறு. பாண்டிய சிம்மாசனத்துக்கு உரிமை கோருவோர் இன்னும் இருக்கிறார்கள். அவர்களுக்காகச் சதிசெய்வோரும் இருக்கிறார்கள்."

"ஆகா! எங்கே அந்தச் சதிகாரர்? தெரியப்படுத்துங்கள்"

"காலம் வரும்போது உங்களுக்கே தெரியும். பாண்டிய குலத்தின் பழைமையான மணிக் கிரீடமும் இந்திரன் அளித்த இரத்தினமாலை யும் வைரமிழைத்த பட்டத்து உடை வாளும் இன்னும் இலங்கையில் இருந்து வருகின்றன. ரோஹண மலை நாட்டில் எங்கேயோ ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் மீட்டுக் கொண்டு வரும் வரையில் பாண்டியப் போர் முற்றுப் பெறாது."

"ஆபரணங்களை மீட்டுக் கொண்டு வரவேண்டும் இளவரசர் அருள்மொழிவர்மரை மதுரைச் சிம்மாசனத்தில் அமர்த்திப் பாண்டிய மணி மகுடத்தையும் பட்டாக் கத்தியையும் அணிவிக்கும் நாளும் வரவேண்டும்"

"ஆகா! இது என்ன வார்த்தை சொல்கிறீர்கள்?"

"குடிமக்களின் நாவிலும் போர் வீரர்களின் உள்ளத்திலும் இருப்பதைச் சொல்கிறோம்"

"அதெல்லாம் பெரிய இராஜரீக விஷயங்கள். நாம் பேச வேண்டாம். உங்களுக்குச் சந்தோஷமளிக்கக்கூடிய வேறு ஒரு முக்கிய விஷயம் சொல்லப் போகிறேன்."

"கவனமாய்க் கேட்டுக் கொள்கிறோம் மகா மந்திரி"

"இலங்கை யுத்தத்தோடு யுத்தம் முடிந்துவிடும் என்று நினைக்க வேண்டாம். இளவரசர் அருள்மொழிவர்மர் இலங்கைப்போர் முடிந்த பிறகு நாலா திசைகளிலும் திக்விஜயம் செய்யப் புறப்படுவார். ஆயிரம் கப்பல்களில் வீரர்களை ஏற்றிக் கொண்டு கீழ்த்திசைக் கடல்களிலே செல்வார். மாநக்கவாரம், மாபப்பாளம், மாயிருடிங்கம், கடாரம், இலாமுரி தேசம், ஸ்ரீவிசயம், சாவகம், புட்பகம் ஆகிய நாடுகளை அந்த மகா வீரர் வெற்றி கொள்வார். தெற்கே முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும் கைப்பற்றுவார்.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### என்றும் நினைவில் நிற்க வேண்டிய மூன்று

- அற்பமாய் எடுக்கக் கூடாதவை
  வியாதி. கடன் கடமை
- வாழ்வில் ஒருமுறை வருவது
  பெற்றோர். அழகு. வாலிபம்
- எவரும் எதிர்பாராதவை.
  நேரம். வாய்ப்பு. மரணம்
- ஒவ்வொருவரையும் பிரித்துக் காட்டுபவை
  நடைமுறை. தோற்றம். பாங்கு
- யாராலும் திருட முடியாதவை.
  கல்வி. அறிவு. ஆற்றல்
- தூய உள்ளத்துடன் செய்ய வேண்டியவை.
  தர்மம். பிரார்த்தனை. கிருபை
- ஞாபகத்தில் இருக்க வேண்டியவை.
  மரணம். உண்மை. கடமை
- சென்றால் திரும்பாதவை.
  உயிர். சொல். வயது
- நோக்கத்தைத் தவிர்ப்பது
  போகம். பேராசை. துர்நடத்தை
- மனிதனை இழிவுபடுத்துபவை
  பொய். திருட்டு. கோள்.

மோ.ஆரபி,
தரம் 5A.




ஜெ.டிலாஜினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி வேகத்தில் அறிவாளியும் மடையனாகிவிடுவான்.

– காரவான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 3ஆம் உலகப் போருக்கான பூர்வாங்கக்கிரியை ஆரம்பித்துவிட்டதா?

உக்ரைன் மீது ரஷ்ய படைகள் தாக்குதலை நடத்திப் போர் தொடுத்ததன் காரணமாக, உலக அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது.

தவிர, உக்ரைன் மீது ரஷ்யா நடத்துகின்ற போர் இன்னமும் ஓய்ந்தபாடில்லை.

அர்த்தமற்ற இந்த யுத்தம் பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களைக் காவு கொண்டதுடன் உக்ரைன் நகரங்கள் தரைமட்டமாக்கப்பட்டன.

அதேவேளை உலக வல்லாதிக்க நாடுகள் போராயுதங்களை மறைமுகமாக உக்ரைனுக்கு வழங்கி வருவதால், போர் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இவையாவற்றுக்கும் மேலாக, ரஷ்யா – உக்ரைன் போர் காரணமாக உலக நாடுகளில் பொருளாதாரப் பெருமந்தம் தலைவிரித்தாடலாயிற்று.

நிலைமை இதுவாக இருக்கையில், உக்ரைன் மீது போர் வெறி கொண்ட ரஷ்யாவின் கோபம் எப்போது தணியும் என்று எதிர்பார்த்திருக்கும்போது, கடந்த 7ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் அதிரடியாக நடத்திய தாக்குதல் உலகை உறைய வைத்துள்ளது.

ஆம், உலக அமைதிக்காக வேண்டுதல் நடந்து கொண்டிருக்கையில், இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய மிக மோசமான தாக்குதலில் இஸ்ரேல் மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதிலும் குறிப்பாக குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் எனப் பலரும் கொல்லப்பட்டமை இஸ்ரேலை கடும் ஆத்திரத்துக்கு ஆளாக்கியுள்ளது.

அதேநேரம் பதில் தாக்குதல் நடத்துவதற்கு தாம் தயாராகிவிட்டதாக இஸ்ரேலியப் பிரதமர் அறிவித்துள்ளார்.

அதேநேரம் ஹமாஸ் போராளிகளை அழித்தொழிப்பதற்காக தாம் தொடுக்கவுள்ள போருக்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ள இஸ்ரேலியப் பிரதமர்; இந்தப் போர் நீண்டதாக இருக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.

ஆக, ரஷ்ய – உக்ரைன் போர். இஸ்ரேல் – ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான யுத்தம். இவற்றுக்கு உலக நாடுகள் கன்னை பிரிந்து வழங்குகின்ற ஆதரவு என்பவற்றைப் பார்க்கும்போது, மூன்றாவது உலக யுத்தத்துக்கான பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகிவிட்டனவோ என்று எண்ணத் தோன்றுகிறது.

என்ன செய்வது மிகக் கொடிய போராயுதங்கள். மனித குலத்தை அழிக்கவல்ல அணுவாயுதங்கள். போர் வெறி கொண்ட ஆட்சித் தலைமைகள். தீராப் பகை கொண்ட நாடுகளின் கபடத்தனங்கள் என்பன காரணமாக மனித குலம் அழிக்கப்படுகிறது. ஏதுமறியாத குழந்தைகள் கொல்லப்படுகின்றனர். அறம் மீறிப் பெண்களும் முதியவர்களும் காவு கொள்ளப்படுகின்றனர்.

உலக அரங்கில் நடக்கின்ற இந்த மோசமான யுத்தத்தைத் தடுக்க விரும்பாத நாடுகளே அதிகம் எனும்போது, அழிவை நோக்கிய பயணம் ஆரம்பித்துவிட்டதெனக் கூறுவதில் தவறில்லை.

# உடனடித் தீர்வு கிடைக்காவிட்டால் சட்டத்தின் ஆட்சி சரித்திரத்தில் மட்டுமே

## ஆர்ப்பாட்டத்தில் சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

நீதிச் சேவைக்கு தொடர்ச்சியான அச்சுறுத்தல் வந்திருக்கின்ற நிலையில் தற்போது அது உச்ச நிலையை அடைந்திருக்கின்றதாக பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந் திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவிற்கு நீதி கோரி நேற்று கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாதாரணமாக நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு அதில் எங்களுக்கு இணக்கமில்லை என்று சொன்னால் நாங்கள் அதற்கு மேற்பட்ட நீதிமன்றத்தை நாடுவோம்.

ஆனால் ஒரு நீதிபதிக்கே நியாயம் கிட்டாமல், ஒரு நீதிபதி நீதித்துறையில் தான் வழங்கிய தீர்ப்புக்காக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு, தன்னுடைய செயல்களுக் காக உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார்.

தனக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது, தனக்கு மரண அச்சுறுத்தல் இருக்கின்றது என்று தன்னுடைய பதவி விலகல் கடிதத்திலேயே வெளிப்படையாகச் சொல்லி நாட்டை விட்டு போகின்ற ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக் கின்றது.

ஆகையினால் தான் எங்களுடைய வழமையான எதிர்ப்பு முறையினை கைவிட்டு வீதிக்கு இறங்கி உச்ச நீதிமன்றத்திற்கு முன்பாகவும் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு முன் பாகவும் ஒன்று திர ண்டு போராட்டத்தை நடத்தினோம்.

நீதிச் சேவைக்கு தொடர்ச்சியாக ஒரு அச்சுறுத்தல் இருந்து வந்திருக்கின்றது. ஆனால் இது இப்போது ஒரு உச்ச நிலையை அடைந்திருக்கின்றது. ஆகையினால் உடனடியாக இதற்கு ஒரு மாற்றுவழி கண்டு பிடிக்கப்பட வேண்டும்.

இந்த நிலை திருத்தப்பட வேண்டும். இல்லை என்று சொன்னால் சட்டத்தின் ஆட்சி என்பது இந்த நாட்டில், முன்னொரு காலத்திலே இருந்தது என்ற சரித்திரமாக மட்டும் இருக்குமே தவிர, சட்டத்தின் ஆட்சி என்றால் என்னவென்று கேட்கும் ஒரு சூழ்நிலை வந்துவிடும்.

ஆகையினால் இது சம்பந்தமாக உடனடியாக ஒரு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சுட்டிக் காட்டியுள்ளார். (நி-5-6)

# யாழில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு,கைது செய்துள்ளனர்.

யாழ் , வடமராட்சி அல்வாய் பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகி காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில், பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார். காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அண்மையில் இடம்பெற்ற குற்றச்செயலுடன் தொடர்புடைய குற்றச்சாட் டில் குறித்த நபரை பொலிஸார் தேடி வந்தனர்.

இந் நிலையில் குறித்த நபர் அல்வாய் பகுதியில் பதுங்கியிருப்பதாக கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் நபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்த போது , உறவினர்கள் இடையூறு விளைவித்தனர். அதையடுத்து அங்கிருந்து திரும்பிய பொலிஸார் மீண்டும் நேற்று அப்பகுதிக்கு சென்று சந்தேகநபரை கைது செய்ய முற்பட்ட வேளை சந்தேக நபர் பொலிஸாரை தாக்கி விட்டு தப்பி செல்ல முற்பட்டுள்ளார்.

பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில், நபர் காயமடைந்ததையடுத்து அந் நபரை கைது செய்து , சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் பொலிஸார் அனுமதித்து, பொலிஸ் பாதுகாப்பும் வழங்கியுள்ளனர்.(நி-5-6-33-104)

## மட்டக்களப்பில் நேற்றும் போராட்டம்

(மட்டக்களப்பு)

பயங்கரவாத எதிர் ப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்றும் மட்ட க்களப்பில், கிழக்கு மாகாண சிவில் சமூகம் என்ற அமைப்பினால் மாபெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் இருந்து பேரணியாக காந்தி பூங்கா வரை சென்ற, போராட்டக்காரர்கள், அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டங்களை அரசாங்கம் வாபஸ் பெற வேண்டும் என்றும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி வழங்க வேண்டும் என்றும் போராட்டக்காரர்களால் வலியுறுத்தப்பட்டது.

இப் போராட்டத்தில் முன்னாள் பிரதேச மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## உறவுகளுக்காக குரல் கொடுப்போம்

### வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள்

(நெளுக்குளம்)

காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளுக்கு கை வைத்தால் நியாயம் கிடைக்கும் வரை பாதிக்கப்பட்ட தரப்பிற்காக குரல் கொடுப்போம் என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி தெரிவித்தார். மட்டக்களப்பில் மேச்சல் தரவைக்காக போராட்டத்தினை மேற்கொண்ட கால்நடை பண்ணையாளர்களுக்கு ஆதரவாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரும் போராட்டத்தில் ஈடுபட்ட வேளை அவர்கள் மீது பொலிஸார் மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தியதில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.இந்த சம்பவத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் வன்மையான கண்டனத்தினை வெளியிட்டுள்ளது.(5-6-299)

# சர்வதேச விசாரணையை நிராகரித்த ரணிலுக்கு புகழாரம் சூட்டிய கோட்டா

(கொழும்பு)

சர்வதேச விசாரணைகளுக்கு அனுமதி இல்லை என பகிரங்க மாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவைப் பாராட்டுகின்றேன்." என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் ,

"ஜனாதிபதிப் பதவியிலிருந்து நான் விலகிய போது புதிய ஜனா திபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவைப் பரிந்துரைத்திருந்தேன். அதற்கமைய பாராளு மன்றம் அவரைப் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது.

ரணில் விக்கிரம சிங்க முதுகெலும்பு உள்ள சிறந்த தலைவர் என்பதை அவர் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நிரூபித்துக் காட்டி வருகின்றார்.

இலங்கை இறைமையுள்ள நாடு.

இங்கு வெளிச்சக்திகளின் தலையீடுகளுக்கு இடமில்லை. பாராளுமன்றத்தை மீறி எவரும் முடிவுகளை எடுக்க முடியாது என கோட்டாபய தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

07

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



ஆனால் தன் தந்தையைக் கொலை செய்து விட்டோமே என்று பயந்து அந்தப் பாவத்தை எப்படி போக்குவது என்று பௌத்த முனிவர்களிடம் கேட்க, அவர்கள் கூறிய எந்தப் பரிகாரமும் அவனுக்குத் திருப்தி அளிக்காத நிலையில், சிவனை வழிபடுகின்ற சைவர்களிடம் பரிகாரம் கேட்க, அவர்கள் சொன்ன பரிகாரம் அவனுக்கு மனதிற்குப் பிடிக்கவே, அவன் சைவசமயத்தை ஏற்றுக் கொண்டான். உடல் முழுவதும் திருநீறு பூசி சைவனாகி சிவ வழிபாடு செய்யத் தொடங்கினான். அதன் . பின்னர் பிக்குகள் சிலரைக் கொன்றான்.

புனிதமான பௌத்த நூல்கள் பலவற்றை எரியூட்டினான். பௌத்த விகாரைகளை இடித்துத் தள்ளினான் . பௌத்த பிக்குகள் பலர் பயத்தினால் தங்கள் சின்னங்களைக் கலைத்து விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச் சென்றனர். பழி பாவத்துக்கு அஞ்சாத ராஜசிங்கன் பௌத்த மதத்தை இவ்வாறு சீரழித்தான் என்று சூளவம்சம் குறிப்பிடுகின்றது.

மலைய தேசத்தைக் கைப்பற்றும் எண்ணம் முதலாம் இராஜசிங்கனின் மனதில் ஏற்பட்டது. அவ்வேளை கண்டியின் மன்னனாக ஜயவீரனின் மகனான கரலியட்ட பண்டாரன் விளங்கினான். 1582 இல் இராஜசிங்கன் கண்டி மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றிக் கொண்டான். கண்டி மன்னனின் மகள் குசுமாதேவியும் மருமகன் யமசிங்கனும் திருகோணமலைக்குத் தப்பி ஓடிப் போர்த்துக்கேயரிடம் உதவி கோரினர்.

கண்டியைக் கைப்பற்றுவதற்குக் கம்பளையைச் சேர்ந்த வீர சுந்தர பண்டாரன் என்பவன் இராஜசிங்கனுக்கு உதவினான். ஒரு கட்டத்தில் வீரசுந்தரன் மீது சந்தேகம் கொண்ட இராஜசிங்கன் வீர சுந்தர பண்டாரனை சீதாவாக்கைக்கு அழைப்பித்துக் கொலை செய்வித்தான்.

அதனால் கண்டிப் பிரதானிகளின் பகைமையைச் சம்பாதித்துக் கொண்டான். இராஜசிங்கன் பிற்காலத்தில் இந்து சமயத்தவனாக மாறியதால் பௌத்த மக்களின் விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டான்.

எனினும் சீதாவாக்கை இராச்சியம் 1587 ஆம் ஆண்டளவில் உச்ச வளர்ச்சியை அடைந்திருந்தது. கோட்டை இராச்சியத்தின் ஒரு பகுதியையும் மலையகத்தையும் தன்னுள்ளடக்கிப் பரந்ததொரு பெரிய இராச்சியமாக விளங்கியது.

### சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சி

கண்டியைக் கைப்பற்ற கம்பளை வீர சுந்தரபண்டாரன் என்ற பிரதானியின் உதவியை முதலில் பெற்ற இராஜசிங்கன் பின்னர் அவனைக் கொலை செய்வித்தமை மலையகப் பிரதானிகளை அவனுக்கு எதிராகக் கலகம் செய்ய வைத்தன. போர்த்துக்கேயருடன் சேர்ந்து கொண்ட வீரசுந்தர பண்டாரனின் மகன் கோணப்பு பண்டாரன் காலகதியில் விமலதர்மசூரியன் என்ற நாமத்தோடு கண்டியின் மன்னனாகிக் கொண்டான். கண்டி அரசுக்கு உரிமையான குசுமாதேவியின் கரம்பற்றியதால் கோணப்பு பண்டாரன் தன் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டான்.

கண்டியைஇழந்துபோனசீதாவாக்கைமன்னன்இராஜசிங்கன், போராலும் பல்வேறுபிரச்சினைகளினாலும் மனம் களைப்புற்று மனம் பேதலித்து. இறுதிக்காலத்தில் பௌத்த மதத்தைக் கைவிட்டு சைவசமயத்தவனாக மாறி பௌத்த பிரதானிகளின் பகைமையைச் சம்பாதித்துக் கொண்டான். பௌத்த தலங்களைச் சைவகுருமாருக்குக் கொடுத்தான். பௌத்த பிக்குகளைக் கொலை செய்து தண்டித்தான். பௌத்த மதத்துக்குப் பல தீமைகளைச் செய்தான். சீதாவாக்கை இராச்சியத்துக்கு அத்திவாரமாக இருந்த பௌத்த ஆதரவு இராஜசிங்கனுக்கு அற்றுப் போனது. பௌத்த மதத்துக்கும் பிக்குகளுக்கும் அதேநேரம் கண்டி மன்னன் விமலதர்மசூரியனின் ஆதரவு கிடைத்தது. இராஜசிங்கன் மீண்டும் ஒரு தடவை கண்டி மீது படையெடுத்தான். தோற்கடிக்கப் பட்டு திரும்பும் வழியில் பெத்தன் கோடச் சோலை என்ற இடத்தில் மூங்கிற் சிராய் குத்தி அதன் விஷத்தினால், 1593 ஆம் ஆண்டு, மரணமடைந்தான். இதன்பின் சீதாவாக்கையின் அரசர்களாக மன்னன் ராஜசூரியன்(1593), நிகபிட்டியபண்டார (1593) இல் இருந்தனர். 1604 இல் விமலதர்மசூரியன் மரணமடைய அவனது ஒன்றுவிட்ட சகோதரன் செனரத் என்பான் கண்டியின் மன்னனானான். அவன் காலத்திலும் சீதாவாக்கையில் குழப்ப நிலை நீடித்தது. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த போர்த்துக்கேயர் சீதாவாக்கை இராச்சியத்தைத் தம் ஆட்சியினுள் சேர்த்துக் கொண்டனர்.

### ஸ்ரீசங்கபோதிவம்சம் கண்டி இராச்சியம் (1469-1815)

ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் கோட்டை இராச்சியத்திற்குரியதாக கண்டிப் பிரதேசம் இருந்ததால் அதன் பிரதிநிதியாக ஜோதிய என்பவன் விளங்கினான். பராக்கிரமபாகுவுக்கு எதிராகப் புரட்சி நடந்த போது அதனை அடக்கிய பராக்கிரமபாகு, கண்டிப் பிரதேசத்துக்கு கம்பளை அரச பரம்பரையைச் சேர்ந்த சேனாசம்மத என்பானை நியமித்தான். கோட்டை இராச்சியத்தின் நிர்வாகம் சீர்குலைந்தபோது, சேனாசம்மத சுதந்திர அரசாகக் கண்டியைப் பிரகடனப்படுத்திக் கொண்டான். தன் பெயரை விக்கிரமபாகு என அழைத்துக் கொண்டான். எனவே 16 ஆம் நூற்றாண்டில் கம்பளை அரச பரம்பரையைச் சேர்ந்த சேனாசம்மதவிக்கிரமபாகு (1469 - 1511) என்பான் கண்டி இராச்சியத்தின் அரசனாக இருந்தான்.

அவன் செங்கடகல (கண்டி) என்ற நகரைத் தலைநகரமாகக் கொண்டிருந்தான். ஹரிஸ்பத்துவ, உடுநுவர, யட்டிநுவர, ஹேவாஹெட்ட, தும்பறை ஆகிய ஐந்து பிரதேசங்களைக் கண்டி இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான். மேலதிகமாக திருகோணமலையைச் சேர்ந்த பாணம, ஊவா, வெல்லஸ்ஸ, தமன்கடுவை, பின்னதன்ன, நுவரகலாவியா ஆகிய பிரதேசங்களையும் மலைநாட்டுடன் சேர்த்துக் கொண்டான்.

1505 வரை கண்டி இராச்சியம் பரப்பளவில் கோட்டை இராச்சியத்தை விடப் பெரிதாகவிருந்தது. அத்தோடு மலைகள், காடுகள், நீர்நிலைகள் என்பன மலையக இராச்சியத்திற்கு இயற்கை அரணாக விருந்தன. சேனாசம்மத விக்கிரம பாகுவிற்குப் பின்னர் அவனது மகனான ஜயவீரபண்டாரா (1511-1551) கண்டி இராச்சியத்தின் அரசனாகினான். சீதாவாக்கையின் மன்னனான மாயாதுன்னையும் இளவரசன் இராஜசிங்கனும் மலைநாட்டரசினைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற பயம் இருந்தது. அதனால் போர்த்துக்கேயரின் உதவியை நாடி இருந்தான். ஜயவீர பண்டாராவுக்குப் பின்னர் அவனது மகனான கரலியத்த பண்டாரா கண்டி இராச்சியத்தின் அரசனாகினான். (1551 - 1581) .

### கரலியத்தபண்டாரா (1551-1581)

கரலியத்த பண்டாரா கண்டி இராச்சியத்தின் மூன்றாவது மன்னனாக கி.பி 1551 முதல் 1581 வரை ஆட்சி புரிந்தான். இவனது தந்தை ஜயவீரபண்டாரத்தின் பின்னர் கண்டியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். இவனின் குடும்பம் இராஜசிங்கனுக்கு அஞ்சி போர்த்துகேயரிடம் தஞ்சமடைந்து இவன் போர்த்துக்கேயருடன் ஒரு உடன்பாட்டினை மேற்கொண்டான். இவனுக்குப் பின்னர் இவனது மகள் தோனா கதரீனா ஆட்சியேறினாள். இவள் குசுமாசனாதேவி எனவும் அழைக்கப்பட்டாள். இவள் டொனாகதரீனா எனும் பெயரிலும் மருமகன் யமசிங்கபண்டார தொன்பிலிப் எனும் பெயரில் கத்தோலிக்க மதத்தை தழுவினார்கள்.

### டொனா கதரீனா (1581)

டொனா கதரீனா (பிறவிப்பெயர்: குசுமாசனதேவி) கண்டி அரசை 1581 இல் ஆண்ட ஒரு அரசி ஆவாள். கண்டி மன்னன் கரலியத்தே பண்டாரன் என்பானின் மகளான இவள், போர்த்துக்கேயரின் கட்டுப்பாட்டின் கீழேயே வாழ நேரிட்டதுடன், அவர்களால் மத மாற்றப்பட்டு, டொனா கதரீனா எனும் பெயரையும் பெற்றுக் கொண்டாள்.

கரலியத்த பண்டாரா இறந்ததை அடுத்து, 1581 இல் போர்த்துக்கேயரால், கண்டியின் அரசியாக முடிசூட்டப்பட்டாள் டொனா கதரீனா. அப்போது இளமங்கையாக இருந்த கதரீனா, சீதாவாக்கை மன்னன் முதலாம் இராஜசிங்கனால் அதே யாண்டு ஆட்சி கவிழ்க்கப்பட்டாள்.

### கண்டியில் முதலாம் இராஜசிங்கன் ஆட்சி (1582-1591)

1582 இல் சீதாவாக்கையின் மன்னன் முதலாம் இராஜசிங்கன் கண்டியைக் கைப்பற்றித் தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டான். தனது இராச்சியத்தைப் பாதுகாத்துத் தருமாறு போர்த்துக்கேயரை வேண்டிய கரலியத்த பண்டாரா கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டான். அத்துடன் தன் மகள் குசுமாதேவி, மருமகன் யமசிங்க பண்டாரன் ஆகியோருடன் போர்த்துக்கேயரிடம் அடைக்கலம் புகுந்தான். இராஜசிங்கனால் மலைநாட்டை நன்கு நிர்வகிக்க முடியவில்லை. மலைநாட்டுத் தலைவர்கள் அவனுக்கு எதிராகப் புரட்சி செய்தனர்.

இப்புரட்சிக்குத் தலைமை தாங்கியவனாகக் கருதப்பட்ட வீரசுந்தர பண்டாரன் என்பானை மன்னன் கொலை செய்வித்தான். அவனது மகனான கோணப்புபண்டாரன் இராஜசிங்கனைப் பழிவாங்கும் பொருட்டுப் போர்த்துக்கேயருடன் சேர்ந்து கொண்டான். 1591 இல் கோணப்பு பண்டாரனின் தலைமையில் வந்தபடை, இராஜசிங்கனுடன் கனேதன்னை என்றவிடத்தில் மோதி வெற்றி பெற்றது.

கண்டி அரசின் மன்னனாக டொன்பிலிப் யமசிங்கபண்டாரன் முடிசூடிக் கொண்டான். 1592 இல் யமசிங்கபண்டாரன் திடீரென மரணமடைந்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே மாதத்துக்கு...

தரப் பரீட்சை அடுத்த வருடம் (2024) மே மாத ஆரம்பத்தில் நடத்தப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

சரியான திகதியை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

2023ஆம் ஆண்டுக்கான உயர் தரப் பரீட்சை பிற்போடப்பட்டதைக் கருத்திற் கொண்டு, சாதாரண தரப் பரீட்சைகள் மே மாதம் வரை ஒத்தி வைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2025ஆம் ஆண்டு முதல் பரீட்சைகள் வழமைபோன்று திட்டமிடப்பட்ட திகதிகளில் நடைபெறும் என்றும் அவர் கூறினார். (ம-7)

## வடக்கு - கிழக்...

வடமத்திய மாகாணங்களிலும் குருநாகல் மாவட்டத்திலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (ம-7)

## பாழடைந்த...

கட்டடம் ஒன்றிலிருந்து நபர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் அடையாளம் காணப்படாத நிலையில், யாழ்ப்பாண பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,33)

## அனைத்து...

பட்டுள்ளது.

நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கோவிட் தொற்று காரணமாக 2020 மார்ச் மாதம் விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளை இலங்கை திரும்பப் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

இருப்பினும், வாகனங்கள் மீதான இறக்குமதித் தடைகள் நீக்கப்பட வாய்ப்பில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மின்சாரம்...

றுள்ளது.

இதில் அச்சுவேலி - தோப்பு பகுதியைச் சேர்ந்த கிட்டுனன் லோகநாதன் (வயது-39) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் ஜே.சி.பி இயந்திரத்தை கழுவிக்கொண்டு இருந்த வேளை, இன்னொருவர் அதனை கழுவுவதற்காக நீர் பாய்ச்சிக் கொண்டு இருந்தார்.

இதன்போது திடீரென நீருடன் மின்சாரமும் இணைந்து பாய்ச்சப்பட்டதால் அவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,33,104)

## பயணிகள்...

நேற்று முன்தினம் கப்பலுக்கான பரீட்சார்த்த நடவடிக்கைகள் இடம்பெற்றன. காலை இந்தியா - நாகபட்டினத்தில் இருந்து புறப்பட்ட குறித்த கப்பல் பிற்பகல் 1.15க்கு காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

காங்கேசன்துறைக்கு வருகை தந்த கப்பலுக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. இதன்போது, கப்பல் சேவைக்குப் பயன்படுத்தப்படும் கடல் பாதை, கடல் மற்றும் காலநிலை நிலைவரம் போன்ற சகல விடயங்களும் கணக்கெடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கப்பலில் 3 மணிநேரத்தில் தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் துறைமுகத்திற்குச் சென்றுவிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பயணிகள் தங்களுடன் 50 கிலோ எடையுள்ள பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகை - காங்கேசன்துறை கப்பலில் பயணம் மேற்கொள்வதற்கு ஒருவழிக் கட்டணமாக 27,000 ரூபாயும் இருவழிக் கட்டணமாக 53,500 ரூபாயும் அறவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## உயர் நீதிமன்றத்...

நேற்று திங்கட்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் சரவணராஜா உயிரச்சுறுத்தல் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக பதவி விலகுவதாக குறிப்பிட்டு கடந்த மாத இறுதியில் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு அவரது இராஜினாமா கடிதத்தை அனுப்பி வைத்திருந்ததுடன், நாட்டிலிருந்தும் வெளியேறியமை பல்வேறு சர்ச்சைகளையும் நீதித்துறை சுதந்திரம் தொடர்பில் கேள்விகளையும் தோற்றுவித்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு, ஹல்ஃப்ஸ் டொப்பில் அமைந்துள்ள உயர் நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இஸ்...

தேடப்பட்டு வந்த குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேலில் பணியாற்றிய அனுலா ஜயதிலக்க என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இஸ்ரேலில் வயதான பார்வையற்ற பெண்ணை அனுலா பராமரித்து வந்துள்ளார்.

அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் பணியாற்றிய இடத்தின் உரிமையாளர்கள் பேஸ்புக்கில் பதிவொன்றை பதிவிட்டுள்ளனர்.

அனுலா எனது மறைந்த அத்தை அலிசாவின் பராமரிப்பாளராக இருந்தார். அர்ப்பணிப்பு மற்றும் அன்பான இதயத்துடன், வீட்டில் உள்ள பூனைகளையும் அநேகமாக பறவைகள் மற்றும் பிற உயிரினங்களையும் கவனித்துக் கொண்டார்.

என் அத்தையின் மறைவுக்குப் பிறகு, அவர் கிப்புட்ஸ் பீரியில் தொடர்ந்து வசித்து வந்தார்.

இந்த நிலையில் இரண்டு நாட்களாக நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் குடும்பத்தினருக்காக வருத்தம் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

# சுற்றுலா வருமானம் அதிகரிப்பு

இலங்கை மத்திய வங்கியின் அண்மைய தரவுகளின்படி, 2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் சுற்றுலா வருமானம் 1.45 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இது சென்ற ஆண்டின் (2022) இதே காலகட்டத்தை விட வியத்தகு 67% உயர்வடைந்த தொகையாக கூறப்படுகிறது. (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2023/10/09
சீட்டிழுப்பு இலக்கம் 5262
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 5 3 2 1 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3504
சீட்டிழுப்பு திகதி 09.10.2023
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 35 50 51 63
விசேட வெற்றி எழுத்து K
26452
தேசிய லொத்தர் சபை

லக்கி 7
திகதி 09.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0088
L7 இலக்கம் 1 1
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 1 5 8 2 4 6

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.09
சீட்டிழுப்பு இலக்கம் 571
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 15 18 43 55
சிம்மம்
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.10.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1292
N 54 62 71 73 N
Double Chance 39542

மெகா பவர்
திகதி 09/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1610
X 04 15 18 38 68
45172

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2236 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.10.09 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 27 60 74 76 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,338,308.40
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
திகதி 2023.10.09 வெற்றி வாரம் 4397 வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 08 10 24 36 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,058,136.00
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 30986
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3948 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.09 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 31 34 44 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,343,916/-
செகண்ட் சான்ஸ் விசேட இல. 297874 970

கப்ருக
திகதி 09.10.2023 வெற்றி வாரம் 1412 வர்ணம் பசுமை
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 21 42 46 47 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 449,851,504.20
செகண்ட் சான்ஸ் விசேட இல. 600311 313
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2023.10.09 வெற்றி வாரம் 1963 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 02 24 47 68 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.46,440,611.20
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் 2062 வர்ணம் சிவப்பு சீட்டிழுப்பு திகதி 2023.10.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,398,360/-
வெற்றி இலக்கங்கள் 13 40 45 75 F
ரூ.100,000/- பணப் பரிசுக்கான விசேட இலக்கங்கள் 793398
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க லொத்தர் விசா

2025 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

★5000 இற்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்படுவர்.

★அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna.
(17405)

077 755 4528


## வடக்கு...

தருமாறு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா உயிரச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியமை தொடர்பில் முழுமையான நீதி விசாரணை நடத்த வலியுறுத்தியும், நீதித்துறையில் இருந்தாலும் தமிழர் என்பதால் இன ஒடுக்குமுறைக்குள்ளாகுவதை கண்டித்தும் தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளன.

ஹர்த்தால் தொடர்பில் இறுதி முடிவை எடுக்கும் தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் யாழ். தந்தை செல்வா அரங்கில் நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பமான போதே எதிர்வரும் 20ஆம் திகதி பூரண ஹர்த்தாலுக்கு தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

குறித்த கலந்துரையாடலில் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சிறீகாந்தா, செயலாளர் சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளனர். எனினும் குறித்த கலந்துரையாடலில் ரெலோ சார்பில் எவரும் பங்குபற்றவில்லை. ரெலோவின் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகாராதலிங்கம் கடையடைப்பு தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7.33.104)

# வவுனியாவில் கோரவிபத்து

## இரு விசேட அதிரடிப் படையினர் பலி

## ஆறு பேர் படுகாயம்



வவுனியா வெளிக்குளம் பகுதியில் நேற்று இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் விசேட அதிரடிப்படையை சேர்ந்த இருவர் உயிரிழந்ததுடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று இரவு 9.30 மணியளவில் மடுகந்தை பகுதியில் உள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமில் இருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்த அதிரடிப்படைக்கு சொந்தமான ஜீப் ரக வண்டி ஒன்று வெளிக்குளம் பகுதியில் பயணிக்கும் போது வீதியின் குறுக்கே சென்ற மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஜீப் வண்டியில் பயணித்த பொலிஸ் விசேட அதிரடிப்படையை சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர் இதில் இருவர் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-7.33)

## எரிபொருள் விலை அதிகரிக்கலாம்!

இஸ்ரேல்-ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையே ஏற்பட்டுள்ள போர் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயரத் தொடங்கி உள்ளது.

இதன் காரணமாக இலங்கையில் மீண்டும் எரிபொருள் விலைகள் உயர்வடையக் கூடுமென பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சர்வதேச அளவில் பல நாடுகளில் பொருளாதார மந்த நிலை காணப்படுகிறது.

இஸ்ரேல்- ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையே ஏற்பட்டுள்ள போர் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயரத் தொடங்கி இருக்கிறது. இது பொருளாதார மந்த நிலை நாடுகளை பெரிதும் பாதிக்கும். (ம-7)


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் ராஜா பிளாசாவிற்கு அருகாமையில் உள்ள திருச்செல்வம் ஒழுங்கையில் 11/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (17376)

077 233 8321
077 540 8208

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

0777 554 528 (17390)

## DISCOVER - 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

சசிகிரி திருமணப்பதிவாளர் காரியாலயம் முன்பாக இராஜ வீதி, கோப்பாய். (கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகில்) (17337)

076 113 3330

## வேலையாள் தேவை

எமது உணவகத்திற்கு கொத்து, றைஸ்,சமையல் செய்யக்கூடியவர் தேவை. (17395)

077 629 0894

## வேலையாட்கள் தேவை

- மேசன் (சம்பளம் 2500/=)
- மேசன் உதவியாளர் (2000/=)
- தச்சு,வேலையாளர்(2500/=-3000/=)
- தச்சு வேலை உதவியாளர்(2000/=)
- பெயின்ரர்(2000/=-2500/=)

தங்குமிட வசதி உணவு தேவைப்படின் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புக்கு : காலை 8.00 மணி – மாலை 5.00 மணிவரை (17403)

077 2100 749

## மேசன் உப ஒப்பந்தகாரர் தேவை (Sub Contractors)

விலைப்பட்டியலுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு : காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை (17404)

077 2100 749

## சேல்ஸ் வாகனம் வாடகைக்கு

சூப்பர் AC மூடி அடிக்கப்பட்டது வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு (17396)

077 925 4050

## விற்பனைக்கு

NP ABU XXX தொடர் இலக்கத்தை கொண்ட ஆட்டோ விற்பனைக்குண்டு. 6000Km (17399)

076 932 1198

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் - கொழும்பு 2,900/=

வடமராட்சி - கொழும்பு 2,700/= (17019)

T.P:077 544 8503

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17366)

076 825 7716 (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

இருபாலையில் 32 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தியில் இருந்து கிழக்குப் பக்கமாக இருபாலைக்குச் செல்லும் வீதியில் 700m தூரத்தில் வீதி ஓரமாக இக்காணி அமைந்துள்ளது. இதன் மறு எல்லையில் நீர்ப்பாசனக்குளம் உள்ளதுடன் காணிக்குள் 2 வெட்டுக்கிணறுகளும் காணப்படுகின்றது.

தொ.இல - 077 181 5027
வட்ஸ் அப் - +4915754710178 (17398)

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் தீபன் கிறியேசன் ஸ்ரூடியோ (Theepan Creation studio) இற்கு வீடியோ எடிற்றர் (Video Editor) தேவைப்படுகின்றார்.

- குறைந்தது ஒரு வருடம் அனுபவம் உள்ளோர்.
- பழக விரும்புவோர் உங்கள் சுயவிபரக் கோப்பினை (Curriculum Vitae) partheek33@gmail.com இற்கு அனுப்பவும்

(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.
இடம் : மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (17402)

077 621 6741, 075 227 8354

## முகாமையாளர் தேவை

நல்லூர் பிரதேசத்தில் இயங்கிவரும் கிறிஸ்தவ பெண்கள் சிறுவர் இல்லத்திற்கு பெண் முகாமையாளர் உடனடியாகத் தேவை.

**வயது** - 50 வயதுக்குட்பட்டவர்கள்
**கல்வித்தகைமை** - க.பொ.த(உயர்தரம்) அல்லது அதற்கு மேல்
**முன் அனுபவம்** - சிறுவர் சம்பந்தமான பயிற்சி/ சிறுவரோடு வேலை செய்த/ நிர்வாகத்துறையில் வேலை செய்த ஆகக் குறைந்தது 2 வருட முன்னனுபவம்
**மொழித்திறன்** - ஆங்கில/ சிங்கள மொழியில் பேசும், வேலை செய்யும் திறன் வரவேற்கப்படும்.
**சம்பளம்** - பேசித் தீர்மானிக்கப்படும்.

நேர்காணலுக்காக பின்வரும் தொலைபேசி எண்ணொன்றுடன் தொடர்பு கொண்டு நேரமொதுக்கி சமூகமளிக்கவும். (17401)

077 395 0460, 077 309 8839
076 636 3307


### யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

### பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும் நினைவுப்பரிசில்கள், சிறப்புப்பரிசில்கள் தொடர்பாக தகவல் கோரல்

எமது பாடசாலையில் வருடாவருடம் நடைபெறுகின்ற பரிசளிப்பு விழாவின் போது நினைவுப்பரிசில்கள், சிறப்புப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அடுத்த மாதமளவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பரிசளிப்பு விழாவில் மேற்படி பரிசில்களை வழங்குவது தொடர்பான தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளதால் அப்பரிசில்களை வழங்கியோர் அல்லது அவை தொடர்பான தெளிவான விபரம் வைத்திருப்போர் அவை தொடர்பான தகவல்களை ஒக்டோபர் மாதம் 20ம் திகதிக்கு முன்னர் பாடசாலை அலுவலகத்தில் ஒப்படைத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் தற்காலத்திற்கு ஏற்ற வகையில் அவற்றை இற்றைப் படுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

திருமதி. இ. முத்துக்குமாரன்
அதிபர் - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை. (C-7407)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org